- புதுப்பிக்கக் கூடிய ஆற்றலிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஆற்றலின் அதிகரிப்பினை விட நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஆற்றல் மூன்று மடங்கு அதிகரிக்கப் பட இருக்கின்றது.
- நிலக்கரியின் தேவையானது 9% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பாரீஸ் உடன்படிக்கையின் கீழ் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவில் கார்பன் வெளியீட்டின் தீவிரத்தை 33% என்ற அளவிலிருந்து 35% வரை குறைப்பதற்கு இந்தியா உறுதி மேற்கொண்டுள்ளது.
- தற்போது, இந்தியாவின் கார்பன் டை ஆக்சைடின் வெளியீடு உலகளாவியச் சராசரியை விட 60% என்ற அளவிற்குக் குறைவாகவே உள்ளது.

இரட்டை மாறுபாடு வடிவ திரிபினை சமநிலைப் படுத்தும் கோவாக்சின்

- கோவாக்சின் தடுப்பூசியானது கோவிட்-19 தொற்றின் இரட்டை மாறுபாடு வடிவ (Double Mutant Strain) திரிபினை சமநிலைப் படுத்துவதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) தெரிவித்துள்ளது.





- பிரேசில் மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகிய நாடுகளின் கோவிட்-19 மாற்றுருகளுக்கு (Variant) எதிராக கோவாக்சின் தடுப்பூசியின் சமநிலையாக்கும் திறனை தேசிய நச்சுயிரியல் மையம் (National Institute of Virology – NIV) சமீபத்தில் நிருபித்துக் காட்டி உள்ளது.
- B.1.617 என்பது சமீபத்தில் பரவி வரும் கோவிட்-19 வைரசின் ஒரு இரட்டை மாறுபாடு வடிவ திரிபு ஆகும்.
- இது E484Q மற்றும் L452R போன்ற மாறுபாடுகளையும் கொண்டுள்ளது.

இரட்டை மாறுபாடு வடிவத்திற்கு எதிரான பாதுகாப்பு - கோவிசீல்ட்

- B.1.617 என்ற தன்மை மாறிய நச்சுயிரிக்கு எதிராக கோவிசீல்ட் தடுப்பு மருந்து பாதுகாப்பு அளிப்பதாக செல் மற்றும் மூலக்கூறு உயிரியியல் மையமானது (CCMB - Centre for Cellular and Molecular Biology) சமீபத்தில் தெரிவித்துள்ளது.
- இது இரட்டை மாறுபாடு வடிவ திரிபு எனவும் அழைக்கப்படுகிறது.
- இந்தத் தடுப்பூசிகள் ஆய்வுக் கூடத்தில் (கண்ணாடிக் குடுவையில்) மேற்கொள்ளப்படும் நடுநிலையாக்கும் தன்மை மதிப்பீட்டினைப் பயன்படுத்தி (Vitro neuralisation assay) இந்த இரட்டை மாறுபாடு வடிவத் திரிபிற்கு எதிராக பரிசோதிக்கப் பட்டன.
- ஆய்வுக்கூட நடுநிலையாக்கும் தன்மை என்ற ஒரு மதிப்பீட்டு முறையானது நச்சுயிரியின் நகலெடுப்பினைத் தடுக்கும் திறனை நோயெதிர்ப்புப் பொருள் கொண்டுள்ளதா என கண்டறியப் பயன்படுத்தப்படுகிறது.

RESPOND திட்டம்

- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் விண்வெளி தொழில் நுட்பப் பிரிவினால் (Space Technology Cell – STC) தொடங்கப்பட்ட 8 கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் உதவி வழங்குவதாக அறிவித்துள்ளது.
- இஸ்ரோ நிறுவனமானது தனது RESPOND என்ற திட்டத்தின் கீழ் இந்த திட்டத்திற்கு உதவுவதாக தெரிவித்து உள்ளது.
- 1970 ஆம் ஆண்டுகளில் இஸ்ரோவானது RESPOND (ஆராய்ச்சிக்கான நிதி உதவி) என்ற திட்டத்தினைத் தொடங்கியது.

கோவிராப்

- கரக்பூரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது தனது முதன்மை சுகாதார தயாரிப்பான கோவிராப் என்ற ஒரு கருவியினை (COVIRAP) வெற்றிகரமான வணிகப் படுத்தியுள்ளது.
- கோவிட்-19 மற்றும் அதற்கு மேற்பட்ட தொற்றுநோய்களைக் கண்டறிய இந்த புதிய நோய்க் கண்டறியும் தொழில் நுட்பம் உதவும்.
- இந்த கையடக்கமான கருவியைப் பயன்படுத்தி ஒரு சுருட்டப்பட்ட பஞ்சு (Swab) மூலம் சேகரிக்கப்பட்ட மனிதனின் மாதிரிகளிலிருந்து கோவிட் -19 தொற்றைக் கண்டறியும் சோதனையை நடத்த இயலும்.

இந்திய விளம்பரங்களில் பாலினப் பாரபட்சம் மற்றும் உள்ளடக்கம்

- யுனிசெப் மற்றும் ஊடக பாலினப் பாரபட்சம் மீதான கீனா திவாஸ் நிறுவனம் ஆகியவற்றால் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை இதுவாகும்.
- இதில் 2019 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் ஒளிபரப்பப்பட்ட 1000க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி மற்றும் யூடியூப் விளம்பரங்கள் பற்றி ஒரு ஆய்வு மேற்கொண்டது.
- இன்று வரை இந்திய விளம்பரங்களில் பெண்களை நிற ரீதியாகவும், கவர்ச்சி ரீதியாகவும் குறிப்பிடுவதோடு அவர்களை வீட்டைத் தவிர தொழில்சார்ந்த அல்லது மற்ற எந்தவொரு ஆசைகளும் இல்லாதவர்களாகவே குறிப்பிடுகின்றனர்.
- விளம்பரங்களில் பெண்களைத் தவறாகவும் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலும் அவர்களைக் குறிப்பிடுவது பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது பெரும் பாதிப்பினை உண்டாக்குகிறது.

CCSCH – 5வது அமர்வு

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI) நறுமணப் பொருட்கள் மற்றும் சமையல் சார்ந்த மூலிகைப் பொருட்கள் மீதான கோடெக்ஸ் குழுவின் (CCSCH - Codex Committee on Spices and Culinary Herbs) 5வது அமர்வினை தொடங்கி வைத்தது.
- CCSCH குழுவானது கோடெக்ஸ் உணவூட்டப் பொருட்களுக்கான ஆணையத்தின் கீழ் (Codex Alimentarius Commission – CAC) நிறுவப்பட்டது.
- நறுமணப் பொருட்கள் மற்றும் சமையல் சார்ந்த மூலிகைப் பொருட்களை உலகத்

தரத்திற்கு உயர்த்துவதற்காக CCSCH நிறுவப்பட்டது.

- இக்குழு இந்தியாவினைத் தலைமையாகவும் இந்திய நறுமணப் பொருட்கள் (Spices Board India) வாரியத்தைச் செயலகமாகவும் கொண்டு 2013 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

கோடெக்ஸ் உணவூட்டப் பொருட்களுக்கான ஆணையம்

- இது 1963 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- இது ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப்பட்ட அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பு ஆகும்.

பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன் யோஜனா

- 2021 ஆம் ஆண்டு ஜூன் வரை பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன் யோஜனாவின் கீழ் 5 கிலோகிராம் உணவு தானியங்களை இலவசமாக வழங்க உள்ளதாக இந்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது.
- தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013 என்ற சட்டத்தின் கீழ், சுமார் 80 கோடி பயனாளிகளுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கப்படுகின்றன.
- இத்திட்டம் 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகத்தினால் தொடங்கி வைக்கப் பட்டது.

கடுகு சாகுபடி

- 9 மில்லியன் டன் நிலங்களைக் கடுகு சாகுபடிக்கு உட்படுத்திக் கொண்டு வருவதாக வேளாண் மற்றும் விவசாய நலத் துறை அமைச்சகம் சமீபத்தில் அறிவித்தது.
- இது 2025-26 ஆம் ஆண்டிற்குள் கடுகு உற்பத்தியினை 17 மில்லியன் டன்களாக உயர்த்தும்.
- தற்போது நாட்டில் அதிக அளவில் கடுகு உற்பத்தி செய்யும் மாநிலமான இராஜஸ்தான் இந்தியாவின் மொத்த கடுகு உற்பத்தியில் 40.82% உற்பத்தியினைச் செய்கிறது.

சர்வதேசச் செய்திகள்

உத்திசார் ஒத்துழைப்பு ஒப்பந்தம்

- ஈரான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் தங்களது இருதரப்பு உறவினை 'உத்திசார் கூட்டாண்மை நிலைக்கு' மேம்படுத்துவதற்காக 25 ஆண்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் தனியார் துறையில் ஒத்துழைப்பு மற்றும் சீனாவின் பட்டை மற்றும் சாலை என்ற திட்டத்தில் ஈரானின் பங்கு ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஈடுபாடு செலுத்தும்.
- ஈரான் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பொருளாதாரத் தடைகளின் கீழ் தொடரும் சமயத்தில் இது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஈரானின் பொருளாதாரச் செயல்பாடுகளை வெகுவாக குறைத்து உள்ளது.
- இந்த ஒப்பந்தமானது சீனாவின் வாங்க் மற்றும் அவருக்கு இணையான பதவியினைக் கொண்ட ஈரானின் ஜவாத் சரீஃப் ஆகியோருக்கிடையே கையெழுத்தானது.

பியூ ரிசர்ச் சென்டரின் ஒரு ஆய்வறிக்கை

- ஐக்கிய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த (Pew Research Centre) பியூ ரிசர்ச் சென்டிரின் ஒரு ஆய்வறிக்கையின்படி, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த (அ) ஒரு நாளைக்கு 10 டாலர்கள் முதல் 20 டாலர்கள் வரை சம்பாதிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை சுமார் 32 மில்லியனாக குறைந்துள்ளது.
- நடுத்தர வர்க்கத்தினரின் எண்ணிக்கை பெருந்தொற்றுக்கு முந்தைய கால மதிப்பீட்டு அளவான 99 மில்லியனிலிருந்து தற்போது 66 மில்லியனாக குறைந்துள்ளது.
- ஒரு நாளைக்கு 2 டாலர்கள் அல்லது அதற்கு குறைவாக ஈட்டும் ஏழை மக்களின் எண்ணிக்கை தற்போது 75 மில்லியனாக உயர்ந்துள்ளதாக பியூ சென்டர் மதிப்பிட்டு உள்ளது.



Heart of Asia மாநாட்டின் 9வது அமைச்சர்கள் மாநாடு

- சமீபத்தில் ஆப்கானிஸ்தான் தொடர்பான 'ஆசியாவின் இதயம் – இஸ்தான்புல் நடைமுறையின்' 9வது அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் அவர்கள் தஜகிஸ்தானின் தலைநகரைச் சென்றடைந்தார்.

- இந்த மாநாடு இஸ்தான்புல் நடைமுறையின் ஒரு அங்கமாகும்.
- இந்த மாநாடு துசான்பே நகரத்தில் நடத்தப் பட்டது.

2020 ஆம் ஆண்டு மனித உரிமைகள் அறிக்கை

- இந்த அறிக்கை அமெரிக்காவின் உள்துறையால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது நாடுவாரியாக மனித உரிமைகளின் நிலையைப் பற்றிய விவாதங்களைக் கொண்டுள்ளது.
- இது ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில் (Congress) சமர்ப்பிக்கப் படுகின்றது.

முக்கியமான விபரங்கள்

- கருத்துச் சுதந்திரத்தை அரசு வெகுவாக ஆதரித்தாலும், தங்களது கருத்து அறிக்கைகளிலும் சமூக ஊடகங்களிலும் இந்திய அரசினை விமர்சிக்கும் பத்திரிக்கையாளர்கள் தொடர்ந்து துன்புறுத்தப் படுவதும் அவர்களைத் தடுப்புக் காவலில் வைப்பதும் தொடர்கிறது.
- இணையதள நிறுவனங்களிடமிருந்துப் பயனாளிகளின் தரவுகளைப் பெறுவதற்கான அரசின் கோரிக்கைகள் வியக்கத்தக்க அளவில் அதிகரித்துள்ளன.
- அரசானது 2019 ஆம் ஆண்டில் பேஸ்புக்கிடமிருந்து 49,382 தரவுகளைப் பெறுவதற்கான கோரிக்கைகளை விடுத்துள்ளது. இது 2018 ஆம் ஆண்டிலிருந்து 32% அதிகமாகும்.
- அதே காலகட்டத்தில் அரசின் கோரிக்கை கூகுளிடம் 69%மும், டிவிட்டரிடம் 68%மும் அதிகரித்துள்ளது.

வஜ்ர பிரகார் 2021

- சமீபத்தில் இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் சிறப்புப் படைகள் 'வஜ்ர பிரகார் 2021' எனும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொண்டன.
- இப்பயிற்சி இமாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்றது.
- இணைந்து திட்டமிடுதல் மற்றும் செயல்பாட்டு உத்திகள் போன்ற துறைகளில் சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் இரு நாடுகளின் சிறப்புப் படைகளின் இயங்குதிறனை மேம்படுத்துதல் போன்றவை இப்பயிற்சியின் நோக்கங்களாகும்.
- இரு நாடுகளின் சிறப்புப் படைகளின் இந்தக் கூட்டுப் பயிற்சியானது ஒருமுறை இந்தியா என்ற முறையிலும் மற்றொரு முறை ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற முறையிலும் மேற்கொள்ளப் படும்.
- சிறப்புப் படைகள் என்பது ரகசியமான, தீவிரவாத எதிர்ப்பு மற்றும் மற்ற பிற சிறப்புச் செயல்பாடுகளை மேற்கொள்ளும் ஒரு நாட்டின் ஆயுதப் படைகளாகும்.
- இமாச்சலப் பிரதேசத்திலுள்ள பக்லோவில் அமைந்துள்ள சிறப்புப் படைகள் பயிற்சிப் பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயிற்சி 11வது கூட்டுப் பயிற்சியாகும்.
- 10வது வஜ்ர பிரகார் பயிற்சி 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள சியாட்டிலில் நடத்தப் பட்டது.

முதல் இந்திய – கொரியப் பூங்கா

- டெல்லி இராணுவக் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் இந்திய கொரிய நட்புறவுப் பூங்காவினை மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் கொரியக் குடியரசின் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. சூ வூக் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.
- இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம், இந்திய இராணுவம், டெல்லி இராணுவக் குடியிருப்பு வாரியம், கொரியத் தூதரகம் மற்றும் இந்திய கொரியப் போர் மூத்தப் படை வீரர்கள் சங்கம் ஆகியவற்றைக் கலந்தாலோசித்து இப்பூங்கா உருவாக்கப் பட்டு உள்ளது.
- 1950 – 53 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கொரியப் போர்களில் பங்கேற்ற 21 நாடுகளில் இந்தியாவும் ஓர் அங்கமாகப் பணியாற்றியதை நினைவு கூறும் ஒரு நினைவுச் சின்னமாகவும் இப்பூங்கா திகழும்.

Carnival – COV

- கொரோனா வைரசுக்கு எதிரான முதல் விலங்குத் தடுப்பூசி ரஷ்யாவில் உருவாக்கப் பட்டுப் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- இது அந்த நாட்டின் வேளாண் பாதுகாப்பிற்கான ஒரு கண்காணிப்பு நிறுவனமான Rosselkhoznadzor என்ற அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தடுப்பூசி Carnivac – Cov எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'SHANTIR OGROSHENA' 2021

- 'SHANTIR OGROSHENA' 2021 (அமைதியின் முன்னோடி) எனப் பெயரிடப்பட்ட ஒரு பன்னாட்டு இராணுவப் பயிற்சியானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 04, முதல் ஏப்ரல் 12 வரை வங்காள தேசத்தில் நடைபெற உள்ளது.
- இப்பயிற்சியின் கருத்துரு, "வலுவான அமைதி காப்பு நடவடிக்கைகள்" (Robust Peace Keeping Operation) என்பதாகும்.
- இப்பயிற்சியானது
  - வங்காள தேசத்தின் 'தேசத் தந்தை' எனப் போற்றப்படும் பங்கபந்து ஷேக் முஜிபூர் ரஹ்மான் அவர்களின் பிறந்த நாள் நிறைவு மற்றும்
  - நாட்டின் 50வது சுதந்திர தினம்

  ஆகியவற்றை நினைவு கூர்வதற்காக நடத்தப்படுகிறது.

உலக நோய்த்தடுப்பு மற்றும் தளவாடங்கள் உச்சி மாநாடு 2021

- HOPE கூட்டமைப்பின் முதல் உலக நோய்த் தடுப்பு மற்றும் தளவாடங்கள் உச்சி மாநாடு ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள அபுதாபியில் நடைபெற்றது.
- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சரான டாக்டர் ஹர்ஷவர்தன் காணொலி மூலம் இந்த மாநாட்டில் பங்கேற்றார்.
- இம்மாநாட்டில் "ஆசியா மீது கவனம் செலுத்துதல் : ஆசியா முழுவதும் தடுப்பூசி உற்பத்தி மற்றும் பங்கீடு" பற்றி விவாதிக்கப்பட்டது.

- டாக்டர் ஹர்ஷ்வர்தன் இந்தியாவின் தடுப்பூசி நிர்வாகத் திட்டம் பற்றியும் கோவிசீல்டு மற்றும் கோவாக்சின் எனப்படும் இரண்டு இந்தியத் தடுப்பூசிகளின் உருவாக்கம் பற்றியும் இம்மாநாட்டில் குறிப்பிட்டு உரையாற்றினார்.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 45 (அ) அதற்கு மேற்பட்ட வயதுள்ள அனைத்துக் குடிமக்களும் தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கான சமீபத்திய முடிவினையும் அவர் குறிப்பிட்டார்.
- HOPE கூட்டமைவு ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள முன்னணித் தொழிற்சாலை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ள ஒரு பொது - தனியார் கூட்டாண்மை ஆகும்.
- தடுப்பூசியின் உலகளாவியப் பங்கீட்டிற்காக இந்தக் கூட்டமைவு இணைந்து செயல்படுவதற்கு உறுதி பூண்டுள்ளது.

2030 ஆம் ஆண்டில் உலகம் : பொதுக் கணக்கெடுப்பு அறிக்கை

- இந்த அறிக்கை சமீபத்தில் UNESCO அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையானது மே 2020 மற்றும் செப்டம்பர் 2020 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2030 ஆம் ஆண்டில் அமைதியான சமூகத்திற்கு மிகப்பெரிய சவால்களாக
  - காலநிலை மாற்றம்,
  - வன்முறை மற்றும் மோதல்,
  - பல்லுயிர்ப் பெருக்கத்தின் இழப்பு மற்றும் பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை,
  - தண்ணீர் மற்றும் வீட்டுவசதி, உணவுத் தட்டுப்பாடு ஆகியவை இருக்கும்.
- கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களைப் பொருத்தவரை 2030 ஆம் ஆண்டில் எதிர் கொள்ளவிருக்கும் பல்வேறு சிக்கல்களுக்குக் கல்வி ஒன்றே முக்கிய தீர்வாக இருக்கும்.
- இருப்பினும், வட அமெரிக்கர்கள் (அமெரிக்கா, கனடா) கல்வியில் அல்லாது அறிவியலையே நம்புகின்றனர்.
- கல்வியைத் தவிர்த்து சர்வதேச ஒத்துழைப்பே இதற்கு மற்றுமொரு தீர்வாக இருக்கும்.

17வது BIMSTEC அமைச்சர்கள் சந்திப்பு

- சமீபத்தில் நடைபெற்ற 17வது பல்துறைத் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பின் (Bay of Bengal Initiative Multi-sector Technical and Economic Cooperation – BIMSTEC) அமைச்சர்கள் சந்திப்பில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பங்கேற்றார்.
- இலங்கையின் தலைமையிலான இச்சந்திப்பு காணொலி மூலம் நடைபெற்றது.
- BIMSTEC அமைப்பில் ஏழு நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.
- இந்த ஏழு நாடுகளில் இந்தியா, நேபாளம், இலங்கை, பூடான் மற்றும் வங்காளதேசம் ஆகியவை தெற்காசியாவைச் சேர்ந்தவையாகும்.

❖ தாய்லாந்து மற்றும் மியான்மர் ஆகியவை தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்தவை ஆகும்.



ARWU தரவரிசை 2020

Academic Ranking of World Universities 2020

Top 1000 | Methodology | Statistics

World Rank	Institution*	By location: India	National/Regional Rank
501-600	Indian Institute of Science		1
601-700	Indian Institute of Technology Madras		2-4
601-700	University of Calcutta		2-4
601-700	University of Delhi		2-4
701-800	Indian Institute of Technology Delhi		5-7
701-800	Indian Institute of Technology Kharagpur		5-7
701-800	Jawaharlal Nehru University		5-7
801-900	Aligarh Muslim University		8-9
801-900	Vellore Institute of Technology		8-9
901-1000	All India Institute of Medical Sciences		10-15
901-1000	Anna University		10-15
901-1000	Bharathiar University		10-15
901-1000	Indian Institute of Technology Kanpur		10-15
901-1000	Indian Institute of Technology Roorkee		10-15
901-1000	Indian Institutes of Science Education and Research (IISERs)		10-15

- 2020 ஆம் ஆண்டு உலகப் பல்கலைக்கழகங்களின் கல்விசார் தரவரிசையில் 15 இந்தியப் பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன.
- இது ஷாங்காய் தரவரிசை எனவும் அழைக்கப் படுகிறது.
- இதில் பங்கேற்ற அனைத்து இந்தியப் பல்கலைக்கழகங்களும் 501 - 600 எனும் பிரிவில் இடம் பெற்று உள்ளன.

ARWUவைப் பற்றிய தகவல்கள்

- ARWU (Academic Ranking of World Universities) உலகப் பல்கலைக்கழகங்களின் கல்விசார் தரவரிசை என்பது ஷாங்காய் தரவரிசை ஆலோசக அமைப்பால் தயாரிக்கப் படுகிறது.
- இது உயர்கல்வி, நுண்ணறிவு மற்றும் ஆலோசனை குறித்த ஆராய்ச்சிக்காகவே என்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சுதந்திரமான அமைப்பு ஆகும்.
- இந்த அமைப்பு 2009 ஆம் ஆண்டு முதல் இந்த தரவரிசையினை வெளியிட்டு வருகிறது.

H1B நுழைவு இசைவு (VISA) தடை நீடிக்கப்படவில்லை

- H1B நுழைவு இசைவிற்கான தடையை நீட்டிக்க அமெரிக்க அதிபர் ஜோ பிடன் இது வரை எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை.
- இந்தத் தடை கடந்த ஆண்டில் டிரம்ப் நிர்வாகத்தால் கொண்டு வரப்பட்டது.
- இந்தத் தடை மார்ச் 31 ஆம் நாளோடு காலாவதியாகிவிட்டது.
- H-1B என்பது குடியுரிமை பெறாதவர்களுக்கான (non - immigrant) ஒரு நுழைவு இசைவு ஆகும்.
- இந்த நுழைவு இசைவு, கருத்தியல் சார்ந்த அல்லது தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்ட வெளிநாட்டுத் தொழிலாளர்களைப் பணி நியமனம் செய்ய அமெரிக்க நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கிறது.

E9 முன்னெடுப்பு

- E9 நாடுகளின் கல்வி அமைச்சர்கள் ஆலோசனைச் சந்திப்பிற்கு இந்தியக் கல்வி அமைச்சர் தலைமை தாங்கினார்.
- இந்த சந்திப்பு, தரமான கல்வி எனும் நீடித்த மேம்பாட்டு இலக்கு எண் 4 என்பதனை அடைவதற்கான ஏற்பாடுகளைத் துரிதப்படுத்த டிஜிட்டல் கல்விமுறையை அதிகரித்தல் எனும் E9 முன்னெடுப்பு பற்றியதாகும்.
- ஐ.நா.வின் தலைமையில் 1993 ஆம் ஆண்டில் E9 கூட்டாண்மை முதன்முதலில் நிறுவப் பட்டது.
- வங்காளதேசம், பிரேசில், சீனா, எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, மெக்சிகோ, நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை E9 நாடுகளாகும்.
- இந்த முன்னெடுப்பு நீடித்த மேம்பாட்டு இலக்கு எண் 4 என்பதற்கான செயல்பாட்டு நிரல்களை (Agenda) மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மூன்று உலகளாவிய கல்வி மாநாட்டு முன்னுரிமைகளின் உள்ள கல்வி முறைகளில் விரைவான மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் இது மேற்கொள்ளப் பட்டது.

- அந்த மூன்று முன்னுரிமை நிலைகள்
  - ஆசிரியர்களுக்கு உதவுதல்,
  - திறன் மேம்பாட்டில் முதலீடு செய்தல் மற்றும்
  - டிஜிட்டல் பிளவினைக் குறைத்தல்.

மிகப்பெரிய தடையில்லா வர்த்தக ஒப்பந்தம்

- விரிவான பிராந்திய பொருளாதார கூட்டு ஒப்பந்தத்திற்கு (RCEP - Regional Comprehensive Economic Partnership) சிங்கப்பூர் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது சீனா தலைமையிலான உலகின் மிகப்பெரிய தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் ஆகும்.
- இவ்வாறு செய்ததில், அதில் பங்கு பெறும் 15 நாடுகளில் இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்த முதல் நாடாக சிங்கப்பூர் உருவெடுத்துள்ளது.
- இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வர குறைந்தபட்சம் ஆறு ஆசியான் மற்றும் மூன்று ஆசியான் அல்லாத உறுப்பு நாடுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

- செயல்படுத்தப்பட்டதும், இந்த ஒப்பந்தம் உலகின் மிகப்பெரிய தடையில்லா வர்த்தக ஒப்பந்தமாகும், மேலும் இது உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கையும், உலகப் பொருளாதாரத்தில் சுமார் 30% என்ற அளவினையும் உள்ளடக்கும்.
- இந்த ஒப்பந்தம் 10 ஆசியான் பொருளாதாரங்கள் மற்றும் ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், நியூசிலாந்து மற்றும் தென் கொரியா ஆகியவற்றை உள்ளடக்கிய பல நாடுகளின் வர்த்தக ஒப்பந்தமாகும்.

- RCEP ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கையெழுத்தானது.
- இந்தியா 2019 ஆம் ஆண்டில் இதிலிருந்து விலகியது.

லிட்டில் குரு

- "லிட்டில் குரு" எனப்படும் சமஸ்கிருதம் கற்கும் செயலி இந்திய உயர் ஆணையத்தின் (High Commission India) இந்திரா காந்தி கலாச்சார மையத்தினால் (IGCC) வங்காள தேசத்தில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த சமஸ்கிருதம் கற்கும் செயலியானது இந்தியக் கலாச்சார உறவுகள் மன்றத்தினால் (ICCR) நடத்தப்படும் பிரச்சாரத்தின் ஓர்அங்கமாகும்.
- இந்த செயலி விளையாட்டு முறையில் அமைந்த உலகின் முதல் சமஸ்கிருதம் கற்கும் செயலியாகும்.
- உலகம் முழுவதும் உள்ள மாணவர்கள், சமய அறிஞர்கள், இந்திய இலக்கிய ஆசிரியர்கள் (Indologists) மற்றும் வரலாற்றாசிரியர்கள் ஆகியோரிடையே சமஸ்கிருத மொழியை ஊக்குவிப்பதை இந்த செயலி நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆகாய விமானப் போக்குவரத்து ஒப்பந்தம்

- இலங்கையுடன் ஆகாய விமானப் போக்குவரத்து (Air bubble) ஒப்பந்தத்தை இந்திய அரசானது இறுதி செய்துள்ளது.
- இது தகுதியான அனைத்துப் பயணிகளையும் இரு நாடுகளுக்கு இடையே பயணிக்க அனுமதிக்கும்.
- இந்தியா இலங்கையுடனான ஆகாய விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தை இறுதி செய்ததின் மூலம் இது சார்க் பிராந்தியத்தில் இது போன்ற 6வது ஏற்பாடாகவும், மொத்தத்தில் இது போன்ற 28வது ஏற்பாடாகவும் இது அமைந்துள்ளது.
- ஒரு இருதரப்பு ஆகாய விமானப் போக்குவரத்து ஒப்பந்தமானது பெருந்தொற்றின் போது முன்நிபந்தனைகளுடன் இரு நாடுகளுக்கு இடையிலான விமானப் போக்குவரத்தைத் தடையற்ற வகையில் தொடர்வதற்கான ஒரு வழிமுறையாகும்.

உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை 2021

- இதைப் பன்னாட்டு உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்த ஆண்டு இது "கோவிட் -19 தொற்றுக்குப் பிறகு உணவு அமைப்பு முறைகளை

மாற்றுவது" (Transforming Food Systems After COVID-19) என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

- சுமார் 95 மில்லியன் மக்கள், பெரும்பாலும் ஆப்பிரிக்காவில், தீவிர வறுமையில் வாழ்கின்றனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களைத் திரும்பப் பெறுதல்

- ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தனது அனைத்து துருப்புக்களையும் திரும்பப் பெறப் போவதாக அமெரிக்க அதிபர் பிடன் சமீபத்தில் அறிவித்தார்.
- அமெரிக்கா அறிவித்த புதிய காலக்கெடு 09/11 தாக்குதல்களின் இருபதாம் ஆண்டு நிறைவுடன் ஒத்துப் போகிறது.
- 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், அமெரிக்காவும் அதன் நேட்டோ நட்பு நாடுகளும் பதினான்கு மாதங்களில் அனைத்துத் துருப்புக்களையும் திரும்பப் பெறுவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இணையதள உள்ளடக்கக் குறியீடு 2021

- பொருளாதார நிபுணர்கள் அடங்கிய புலனாய்வுப் பிரிவானது (EIU - Economist Intelligence Unit) பேஸ்புக் நிறுவனத்துடன் இணைந்து இணையதள உள்ளடக்க குறியீடு 2021 என்ற ஒரு குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இதில் உலகளவில் இந்தியா 49வது இடத்தில் உள்ளது,
- இந்தியாவும் தாய்லாந்தும் இந்த இடத்தை (49வது) பகிர்ந்து கொள்கின்றன.
- இக்குறியீடானது பேஸ்புக் நிறுவனத்தினால் தொடங்கப்பட்டு EIU அமைப்பினால் மேம்படுத்தப் பட்டு உள்ளது.
- இதில் உள்ள முதல் 5 நாடுகள்,
  - ஸ்வீடன்,
  - அமெரிக்கா,
  - ஸ்பெயின்,
  - ஆஸ்திரேலியா மற்றும்
  - ஹாங்காங் ஆகும்.

Overall rankings	
1st	Sweden
2nd	United States
3rd	Spain
4th	Australia
5th	Hong Kong

S-400 டிரையம்ப் SA21 க்ரௌலர்

- வான்வழிப் பாதுகாப்பு அமைப்பான S-400 டிரையம்ப் SA21 க்ரௌலரை இந்தியாவிற்கு வழங்க ரஷ்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது நீண்ட வரம்புடைய நிலப்பரப்பிலிருந்து வானில் உள்ள ஒரு இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணையாகும்.
- இந்தப் பாதுகாப்பு அமைப்பை வாங்கிய முதல் நாடு சீனாவாகும்.
- சீனாவையடுத்து சவுதி அரேபியா, இந்தியா, துருக்கி மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகள் தற்போது இந்த அமைப்பை வாங்கியுள்ளன.

"எனது உடல் எனது" அறிக்கை

- சமீபத்தில் ஐ.நா.வின் மக்கள்தொகை நிதியத்தின் (UNFPA - United Nations Population Fund) 'my body is my own' (எனது உடல் எனது) என தலைப்பிடப்பட்ட 2021 ஆம் ஆண்டு உலக மக்கள்தொகை நிலவர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உடல்சார்ந்த சுயஉரிமை மீதான அறிக்கையினை ஐ.நா. வெளியிடுவது இதுவே முதல் முறையாகும்.
- 57 வளர்ந்து வரும் நாடுகளைச் சேர்ந்த பெண்களில் கிட்டத்தட்ட பகுதியளவினருக்கு தங்களது உடல் சார்ந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு உரிமை இல்லை.
- இதனுள் கருத்தடை, உடல்நலம் பேணுதல் (அ) அவர்களின் பாலியல் சார்ந்தவை போன்றவையும் உள்ளடங்கும்.
- 75% நாடுகள் மட்டுமே கருத்தடையை முழுமையாகவும் சமமாகவும் உபயோகிக்க சட்ட ரீதியில் உறுதி செய்துள்ளது.

3000 வருடங்கள் பழமையான நகரம்

- எகிப்து நாடு தனது லக்சர் பகுதி என்பதின் அருகில் 3000 வருடங்கள் பழமையான தொலைந்த நகரம் ஒன்றினைக் கண்டறிந்து உள்ளது.
- இது நைல் நதியின் மேற்குக் கரையோரத்தில் அமைந்து இருக்கின்றது.

- இது அடோன் எனும் கடவுள் மற்றும் மூன்றாம் அமென்ஹோடெப் என்ற மன்னர் ஆகியோருடன் தொடர்புடையதாகும்.
- இது 3000 வருடங்களுக்கு முந்தைய ஒரு பொற்காலமான பேரோக்கள் (pharaohs) காலத்தைச் சேர்ந்த, இதுவரையில் எகிப்தில் கண்டறியப்பட்ட மிகப்பெரிய பண்டைய நகரமாகும்.
- முறையாக அடென் எனப் பெயரிடப்பட்ட இந்த நகரம் பொதுவாக "தொலைந்து போன தங்க நகரம்" என்று அழைக்கப்படுகின்றது.

சுதந்திரக் கடல் போக்குவரத்து

- அமெரிக்கக் கடற்படை சமீபத்தில் லட்சத்தீவு அருகே இந்தியப் பெருங்கடல் பகுதியில் சுதந்திரக் கடல் போக்குவரத்து என்ற ஒரு நடவடிக்கையை நடத்தியுள்ளது.
- இந்த நடவடிக்கையின் போது, அமெரிக்க போர்க் கப்பலானது இந்தியாவின் முன் ஒப்புதல் பெறாமல் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் நுழைந்தது.
- ஐக்கிய நாடுகளின் கடல் சட்டத்தின் கருத்துப்படி, கப்பல்கள் தமது பிரத்தியேக பொருளாதார மண்டலத்தைப் பயன்படுத்துவதை அந்த நாடுகளால் தடுக்க முடியாது.
- இருப்பினும், இந்தியச் சட்டங்களின்படி, எந்தவொரு வெளிநாட்டு இராணுவமும் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் எந்தவொரு நடவடிக்கையையும் செய்வதற்கு முன்னர் தெரிவிக்க வேண்டும்.
- வளரும் நாடான இந்தியா, அதன் EEZ மண்டலத்தை இன்னும் முழுமையாக ஆராய வேண்டும்.



நாணய கண்காணிப்புப் பட்டியல்

- அமெரிக்க கருவூலமானது இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்கான அரையாண்டு அறிக்கையின் இந்த ஏப்ரல் பதிப்பானது பிடென் நிர்வாகத்திலிருந்து வெளியிடப்படும் முதல் அறிக்கையாகும்.
- இது அமெரிக்காவின் 20 மிகப்பெரிய வர்த்தகப் பங்காளிகளின் நாணய நடைமுறைகளை மதிப்பாய்வு செய்கிறது.
- அமெரிக்காவைப் பொறுத்தவரை, வேண்டுமென்றே பணமதிப்பைக் குறைப்பது என்பது ஒரு நாட்டின் நாணயத்திற்கும் அமெரிக்க டாலருக்கும் இடையிலான மாற்று விகிதத்தைப் பாதிக்கிறது.
- இது சர்வதேச வர்த்தகத்தில் நியாயமற்ற முறையில் நன்மைகளைப் பெற்றிட வேண்டி செய்யப் படுகிறது.
- அவர்களின் நாணய நடைமுறைகள் தொடர்பாக வெளியிடப்படும் 'கண்காணிப்புப் பட்டியலில்' (Monitoring List) உள்ள 11 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- அமெரிக்காவுடனான இந்தியாவின் வர்த்தக உபரி 2020 ஆம் ஆண்டில் 24 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- இந்தியாவையும் சேர்த்து இந்தப் பட்டியலில் உள்ள மற்ற 10 நாடுகள் சீனா, ஜப்பான், கொரியா, ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மெக்சிகோ ஆகியனவாகும்.
- இந்த முறை, சீனாவை அந்தப் பட்டியலில் இருந்து அமெரிக்கா நீக்கியுள்ளது.
- இருப்பினும், தைவான் கண்காணிப்புப் பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு

- இந்த அமைப்பானது, உலகில் பயணத்திற்கு மிகவும் ஏதுவான கடவுச் சீட்டுகள் பற்றி ஆய்வு செய்து அதன் பட்டியலை வெளியிடுகிறது.
- நுழைவு இசைவுச் சீட்டு (Visa) இன்றியும் அல்லது ஒரு நாட்டிற்குச் சென்ற பின் அங்கு நுழைவு இசைவு பெற்றும் (Visa-on-Arrivals) இந்தியக் குடிமக்கள் சுமார் 58 இடங்களுக்குப் பயணிக்க இயலும் என்பதின் அடிப்படையில் இந்தியா இப்பட்டியலில் 84வது இடத்தில் உள்ளது.
- ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் ஜெர்மனி, தென் கொரியா ஆகியவை முறையே முதல் 3 இடங்களில் உள்ளன.

உலகப் பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீடு 2021

- எல்லைகளைக் கடந்த நிருபர்கள் எனும் ஒரு இலாப நோக்கமில்லா அமைப்பானது சமீபத்தில் இக்குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இந்த அமைப்பு 180 நாடுகளை இதில் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- இக்குறியீட்டில் இந்தியா 142வது இடத்தில் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டிலும் இந்தியா இதே இடத்தில் தான் இருந்தது.
- நார்வே முதலிடத்திலும் அதனையடுத்து பின்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளும் இதில் உள்ளன.
- 2020 ஆம் ஆண்டிலும் நார்வே முதலிடம் பிடித்திருந்தது.
- இக்குறியீட்டின் கடைசி இடத்தில் எரித்ரியா (Eritrea) உள்ளது.
- 180 நாடுகளில் சீனா 177வது இடத்தில் உள்ளது.
- இதில் வடகொரியா 179வது இடத்திலும் துர்க்மெனிஸ்தான் 178வது இடத்திலும் உள்ளன.
- இந்த அறிக்கையானது பிரேசில், ரஷ்யா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளுடன் "மோசமான நாடுகள்" ("BAD" category) என்ற பிரிவில் இந்தியாவையும் வகைப்படுத்தி உள்ளது.
- இந்தியாவைப் பத்திரிக்கையாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடுகளுள் ஒன்று என இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

REPORTERS WITHOUT BORDERS
FOR PRESS FREEDOM

மரண தண்டனை பற்றிய உலகளாவிய மறுசீராய்வு

- சமீபத்தில் அம்னெஸ்டி இன்டர்நேஷனல் என்ற அமைப்பு உலகளாவிய மரண தண்டனை பற்றிய மறுசீராய்வினை வெளியிட்டுள்ளது.
- அம்னெஸ்டி இன்டர்நேஷனல் வெளியிட்ட அறிக்கையின்படி, 18 நாடுகளில் சுமார் 483 மரண தண்டனைகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.
- 2019 ஆம் ஆண்டில், நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளின் எண்ணிக்கை 657 ஆகும்.
- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளின் எண்ணிக்கை 26% உயர்ந்துள்ளது.
- சீனா, ஈரான், எகிப்து, ஈராக் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகள் என்ற வரிசையில் அதிக எண்ணிக்கையிலான மரண தண்டனைகள் நிறைவேற்றப் பட்டு உள்ளன.
- 483 தண்டனைகளில் 16 பெண்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.
- அவர்கள் எகிப்து, சவுதி அரேபியா, ஈரான் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

- இந்தியா, கத்தார், ஓமன் மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் மீண்டும் மரண தண்டனையை விதிக்கத் தொடங்கியுள்ளன.
- ஈரான் நாட்டில் 2019 ஆம் ஆண்டில் 100 ஆக இருந்த மரண தண்டனையின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் பாதியாக குறைந்து 45 ஆக உள்ளது.
- சவுதி அரேபியாவில் அதன் எண்ணிக்கை 85% குறைந்துள்ளது.
- சிரச்சேதம், தூக்கிலிடுதல், மின்சார அதிர்வு வழங்குதல், துப்பாக்கிச் சூடு மற்றும் விஷ ஊசி போன்ற மரண தண்டனை விதிக்கும் முறைகளை இந்நாடுகள் பின்பற்றின.

METHODS OF EXECUTIONS IN 2020[7]

BEHEADING	Saudi Arabia							
ELECTROCUTION	USA							
HANGING	Bangladesh	Botswana	Egypt	India	Iran	Iraq	South Sudan	Syria
LETHAL INJECTION	China	USA	Viet Nam					
SHOOTING	China	Iran	North Korea	Oman	Qatar	Somalia	Taiwan	Yemen

- ஈரான் நாடு, மூன்று நபர்களுக்கு அவர்கள் 18 வயதிற்கும் குறைவான வயதில் செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதித்து இருந்தது.
- போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் சீனா, ஈரான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் குறைந்தபட்சம் 30 பேருக்கு மரண தண்டனை விதித்துள்ளன.
- இந்தியா, சீனா, வங்க தேசம், வட கொரியா, வியட்நாம், மற்றும் தாய்வான் ஆகிய ஆசிய – பசிபிக் நாடுகள் 2020 ஆம் ஆண்டில் மரண தண்டனைகளை விதித்துள்ளன.
- பாகிஸ்தான், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் மரண தண்டனை எதுவும் விதிக்கப்படவில்லை.
- சீனா உலகளவில் அதிக எண்ணிக்கையில் மரண தண்டனை விதிக்கும் நாடாகும்.
- இருப்பினும் சீனாவில் விதிக்கப்படும் மரண தண்டனைகளின் சரியான எண்ணிக்கை விவரம் தெரிவதில்லை.

குறிப்பு

- சாத் (Chad) நாடானது எந்தவொரு குற்றங்களுக்கும் மரண தண்டனை விதிப்பதை நிறுத்தி விட்டது.
- மரண தண்டனை விதிப்பதை நிறுத்திய 22வது அமெரிக்க மாநில அரசு கொலராடோ ஆகும்.

ஆஸ்திரேலியா–இந்தியா இந்தோ–பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பு

- ஆஸ்திரேலிய நாடானது இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பின் கீழ் ரூ. 81.2 மில்லியன் (1.4 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர்) தொகையினை வழங்குவதாக அறிவித்துள்ளது.

- இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பானது (Indo – Pacific Oceans Initiative – IPOI) 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற கிழக்காசிய உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் முன்மொழியப்பட்டது.
- கடல்சார் எல்லைகளை வலுப்படுத்துவதே இம்முன்னெடுப்பின் முக்கிய நோக்கம் ஆகும்.

கூட்டாண்மை பற்றிய தகவல்கள்

- இந்த முன்னெடுப்பு ஒரு சுதந்திரமான மற்றும் அனைவருக்குமான வளமான ஒரு இந்தோ-பசிபிக் பகுதியை உருவாக்க ஆதரவு வழங்கும்.
- இதில் உதவித் தொகையைப் பெற விண்ணப்பிப்பதற்கு ஒரு நிறுவனம் (அ) அமைப்பானது இந்தியாவில் (அ) ஆஸ்திரேலியாவில் அமைந்திருப்பதோடு, அந்த நிறுவனம் இரு நாடுகளில் ஏதேனும் ஒன்றுடன் கூட்டாண்மை நிறுவனங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள் பட்டியலில் இந்தியா

- சர்வதேச மதச் சுதந்திரத்தைக் கண்காணிக்கும் அமெரிக்க அரசு நிறுவனமானது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டும் இந்தியாவினைக் குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள் பட்டியலில் (Country of Particular Concern - CPC) சேர்க்கப் பரிந்துரை செய்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு CPC பட்டியலில் சேர்க்கப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ள மற்ற புதிய நாடுகள் ரஷ்யா, சிரியா மற்றும் வியட்நாம் ஆகியவையாகும்.

- USCIRF (United States Commission on International Religious Freedom) அமைப்பினால் ஏற்கனவே CPC பட்டியலிலிருக்கும் நாடுகளுள் மறுபடியும் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைக்கப்பட்ட நாடுகள் பர்மா, சீனா, எரித்ரியா, ஈரான், நைஜீரியா, வடகொரியா, பாகிஸ்தான், சவுதி அரேபியா, தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியவை ஆகும்.
- 2019 ஆம் ஆண்டில் சிறப்பு கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட கியூபா மற்றும் நிகரகுவாவுடன் சேர்த்து ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, அசர்பெய்ஜான், எகிப்து,

இந்தோனேசியா, ஈராக், கஜகஸ்தான், மலேசியா, துருக்கி மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளும் "சிறப்பு கண்காணிப்புப் பட்டியலில்" சேர்க்கப்பட பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

நிம்பஸ் திட்டம்

- இஸ்ரேலிய அரசானது தனது இராணுவ மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு மேகக் கணிமைச் சேவைகளை (Cloud Services) வழங்குவதற்கு வேண்டி கூகுள் மற்றும் அமேசான் ஆகிய வலைதள சேவை வழங்கும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து உள்ளது.
- "நிம்பஸ் திட்டம்" எனப் பெயரிடப்பட்ட இத்திட்டமானது நான்குக் கட்டங்களில் அமல்படுத்தப்பட உள்ளது.
- நிம்பஸ் திட்டமானது 1 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் அமல்படுத்தப்பட உள்ளது.
- இத்திட்டமானது இஸ்ரேலில் மேகக் கணிமைத் தளங்களை உருவாக்கும்.
- இத்தளங்கள் கடுமையான பாதுகாப்பு வழிகாட்டுதல்களின் கீழ் இஸ்ரேலிய எல்லைக்குள்ளேயேத் தகவல்களைப் பாதுகாத்து வைத்திருக்கும்.

இட்ரிஸ் டெபி

- ஆப்பிரிக்காவில் நீண்ட காலம் பணியாற்றிய தலைவர்களுள் ஒருவரான சாட் நாட்டின் அதிபரான இட்ரிஸ் டெபி 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 அன்று உயிரிழந்தார்.
- அந்த நாட்டின் வடக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்களுடனான மோதலில் அவர் காயமடைந்ததையடுத்து அவர் உயிரிழந்தார்.
- அவரின் வயது 68 ஆகும்.
- ஏப்ரல் 11 ஆம் தேதி நடைபெற்ற அதிபர் தேர்தலில் டெபி வெற்றி பெற்றார்.
- இது அவரது ஆறாவது பதவிக் காலமாக இருந்திருக்கும்.
- இட்ரிஸ் டெபி சாட் நாட்டில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பதவியில் இருந்தார்.

ஆஸ்திரேலியா மற்றும் சீனாவின் பட்டை மற்றும் சாலை ஒப்பந்தம்

- தேச நன்மைக்காக பட்டை மற்றும் சாலை முன்னெடுப்பின் ஒப்பந்தங்களை ரத்து செய்வதாக ஆஸ்திரேலிய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் விக்டோரிய மாகாண அரசு சீனாவுடன் இரண்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டது.
- அந்த மாகாணத்தில் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அந்த மாகாணத்தில் சீன முதலீடுகளை கொண்டு வரும் நோக்கில் 2019 ஆம் ஆண்டில் இரண்டாவது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த இரு ஒப்பந்தங்களும் சீனாவின் பட்டை மற்றும் சாலை எனும் முன்னெடுப்பின் கீழ் மேற்கொள்ளப் பட்டன.

- சமீபத்தில் இந்த இரு ஒப்பந்தங்களையும் ஆஸ்திரேலிய அரசு ரத்து செய்துள்ளது.

குறிப்பு

- 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் ஆஸ்திரேலிய அரசு, ஆஸ்திரேலிய வெளிநாட்டு உறவுகள் (மாகாணம் மற்றும் ஒன்றியச் சீரமைப்பு) சட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- வெளிநாடுகள் மற்றும் மாகாண அரசுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்தையும் ரத்து செய்தவற்கு ஆஸ்திரேலிய அரசிற்கு இச்சட்டம் அதிகாரம் அளிக்கிறது.
- ஒப்பந்தங்களால் தேச நன்மை பாதிக்கப்படும் எனும் நிலை வரும் போது அந்த நாட்டு அரசு இந்த நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

எத்தியோபியாவில் அவசர நிலை

- சமீபத்தில் தனது நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வன்முறைகள் வெடித்ததையடுத்து அம்ஹாரா பகுதியின் தென்பகுதிகளில் அவசர நிலையை எத்தியோபியா அறிவித்து உள்ளது.
- ஒரோமோ பழங்குடியினத் தலைவர் ஒரு பள்ளிவாசலுக்கு வெளியே சுட்டுக் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் வன்முறை வெடித்துள்ளது.
- இதனால் ஒரோமோ இன மக்களுக்கும் அம்ஹாரா பகுதியின் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல் அதிகரித்துள்ளது.

இம்பாக்ட் தரவரிசை – 2021

- ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி மேம்பாட்டு இலக்குகள் தொடர்பாக பல்கலைக் கழகங்களை மதிப்பிடும் ஒரே உலகளாவிய செயல்திறன் அட்டவணை டைம்ஸ் உயர்கல்வி தொடர்பான இம்பாக்ட் (தாக்கம்) என்ற தரவரிசையாகும்.
- நிலைத் தன்மையில் சிறந்து விளங்கும் உலகின் 100 முன்னணி கல்வி நிறுவனங்கள் பட்டியலில் இடம் பெற்ற ஒரே இந்தியப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டிலுள்ள அம்ரித் விஷ்வ வித்யா பீடமாகும் (81வது இடம்).
- பட்டியலின் முன்னணி இடங்களான 100 முதல் 200 வரையிலான கல்வி நிறுவனங்கள் எனும் பிரிவில் இடம் பெற்ற மற்ற இரு இந்திய நிறுவனங்கள், கர்நாடகாவிலுள்ள JSS உயர்கல்வி பல்கலைக்கழகம் மற்றும் பஞ்சாபிலுள்ள லவ்லி ப்ரொஃபெஷனல் பல்கலைக் கழகம் ஆகியவையாகும்.
- உலகளவில், மான்செஸ்டர் பல்கலைக் கழகம், (ஐக்கிய ராஜ்ஜியம்) சிட்னி பல்கலைக் கழகம் (ஆஸ்திரேலியா) மற்றும் RMIT பல்கலைக் கழகம் (ஆஸ்திரேலியா) ஆகியவை முதல் 3 இடங்களைப் பெற்றுள்ளன.
- இப்பட்டியலில் 75 கல்வி நிறுவனங்களுடன் அதிக நிறுவனங்களைக் கொண்ட நாடாக ரஷ்யாவும் அதனையடுத்து 73 கல்வி நிறுவனங்களுடன் ஜப்பானும் இடம் பெற்று உள்ளன.

பொருளாதாரச் செய்திகள்

முக்கிய நிதியியல் மாற்றங்கள்

- 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் 01 முதல் நடைமுறைக்கு வரும் முக்கிய நிதியியல் மாற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

புதிய ஊதிய விதிகள்

- புதிய இழப்பீட்டு விதிகளின் படி, மொத்த ஊதியம் (அ) இழப்பீட்டுத் தொகையில் படித் தொகையானது 50 சதவிகிதத்திற்கு மேல் மிஞ்சக் கூடாது.
- அதாவது அடிப்படை ஊதியமானது 50 சதவீதமாக இருக்க வேண்டும்.
- இந்த விதிக்கு இணங்க முதலாளிகள் சம்பளத்தின் அடிப்படை ஊதியக் கூறுகளை அதிகரிக்க வேண்டும்.
- இதனால் பணிக் கொடைத் தொகை மற்றும் தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் உயர்வு ஏற்படும்.

புதிய தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி வரி விதிகள்

- 2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஏப்ரல் 01 முதல் ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்கும் மேலான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கு அளிக்கப்படும் பங்களிப்பின் மீதான வட்டிக்கு வரி விதிக்கப்படும் என அறிவித்துள்ளார்.
- ரூ.2.5 லட்சம் வரையிலான வருங்கால வைப்பு நிதிக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியிலிருந்துப் பெறப்படும் வட்டிக்கு தற்போது உள்ள வரி விதிமுறைகளின் கீழ் விலக்கு அளிக்கப்படுகிறது.
- இருப்பினும் ஏப்ரல் 01 முதல் ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்கும் மேலான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மீதான வட்டிக்கு (தொழிலாளரின் பங்களிப்பிற்கு மட்டும்) வரி விதிக்கப்படும்.

பொது துறை வங்கிகள் இணைப்பு

- ஏழு பொதுத்துறை வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது கணக்குப் புத்தகம் (Pass book) மற்றும் காசோலைப் புத்தகம் (Cheque book) ஆகியவற்றைப் புதுப்பிக்க வேண்டும், ஏனெனில் 2021 ஆம் ஆண்டின் ஏப்ரல் 01 முதல் அவை செயல்படாது.
- அந்த வங்கிகள் விஜயா வங்கி, தேனா வங்கி, கார்ப்பரேஷன் வங்கி, அலகாபாத் வங்கி, ஆந்திரா வங்கி, ஓரியண்டல் காமர்ஸ் வங்கி மற்றும் யுனிடெட் இந்திய வங்கி ஆகியவனவாகும்.
- ஏனெனில் இந்த ஏழு வங்கிகளும் ஏப்ரல் 01 முதல் மற்ற பிற வங்கிகளுடன் இணைக்கப் பட உள்ளது.
- இணைக்கப்பட உள்ள வங்கிகள்,
    - தேனா வங்கி மற்றும் விஜயா வங்கி ஆகியவை பரோடா வங்கியுடனும்,
    - ஓரியன்டல் காமர்ஸ் வங்கி மற்றும் யுனிடெட் இந்திய வங்கி ஆகியவை பஞ்சாப் தேசிய வங்கியுடனும்,
    - கார்ப்பரேஷன் வங்கி மற்றும் ஆந்திரா வங்கி ஆகியவை யூனியன் இந்திய வங்கியுடனும்

- o அலகாபாத் வங்கியானது இந்தியன் வங்கியுடனும் இணைக்கப்பட உள்ளன.

தானாக பணப்பிடித்தம் செய்வதை வங்கிகள் ரத்து செய்தல்

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) புதிய விதிமுறைகளின் காரணமாக ஏப்ரல் 01 முதல் டிடிஎச் (DTH), கைபேசி, அகலக் கற்றை, மின்சாரம், தண்ணீர் மற்றும் இதர வசதிகளுக்கான கட்டணங்களைத் தானாக பிடித்தம் செய்யும் முறையை வங்கிகள் ரத்து செய்ய உள்ளன.

4 பொதுத்துறை வங்கிகளில் மூலதன முதலீடு

- ❖ வட்டியில்லாப் பத்திரங்களை வங்கிகளுக்கு வழங்குவதன் மூலம் 2020-21 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான நான்கு வங்கிகளில் ரூ.14,500 கோடியை மூலதன முதலீடு செய்ய உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ❖ அரசுக்குச் சொந்தமான அந்த நான்கு வங்கிகள்
  - o சென்ட்ரல் இந்தியா வங்கி
  - o இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
  - o பாங்க் ஆஃப் இந்தியா மற்றும்
  - o UCO வங்கி
- ❖ இது நடப்பு நிதியாண்டான 2020 – 21 ஆம் ஆண்டில் பொதுத்துறை வங்கிகளுக்கு அரசு செலுத்த வேண்டிய மொத்த மூலதன முதலீட்டுத் தொகையான ரூ.20,000 கோடியை நிறைவு பெறச் செய்கிறது.
- ❖ முன்னதாக 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பஞ்சாப் மற்றும் சிந்து வங்கியில் ரூ.5,500 கோடி முதலீடு செய்யப்பட்டது.

(Ref. F. No.4(17)-B(W&M)/2020 dated March 30, 2021)

Name of the Public Sector Banks and Allocation of Securities (i) Non-interest bearing (Non-transferable) Special GoI Security, 2031; (ii) Non-interest bearing (Non-transferable) Special GoI Security 2032; (iii) Non-interest bearing (Non-transferable) Special GoI Security 2033; (iv) Non-interest bearing (Non-transferable) Special GoI Security 2034; (v) Non-interest bearing (Non-transferable) Special GoI Security 2035; and (vi) Non-interest bearing (Non- transferable) Special GoI Security 2036, is as under:

Sl. No.	Name of Eligible Bank	Maturing in Year (₹ crore)						(₹ crore)
		2031	2032	2033	2034	2035	2036	Amount Allocated
1	Central Bank of India	800	800	800	800	800	800	4800
2	Indian Overseas Bank	685	683	683	683	683	683	4100
3	Bank of India	500	500	500	500	500	500	3000
4	UCO Bank	435	433	433	433	433	433	2600
	Total	**2420**	**2416**	**2416**	**2416**	**2416**	**2416**	**14,500**

By Order of the President of India,
RAJAT KUMAR MISHRA, Addl. Secy.

காசியாபாத் நகர் நிகாம் – மும்பை பங்கு வர்த்தகம்

- ❖ காசியாபாத் நகர் நிகாமானது BSE பங்குச் சந்தையில் தன்னைப் பதிவு செய்து கொண்டு உள்ளது

- மும்பை பங்கு வர்த்தகத்தின் (Bombay Stock Exchange – BSE) பத்திரத்தைப் பயன்படுத்தி தனியார் பங்குகளின் அடிப்படையில் நகராட்சிப் பத்திரங்களை வழங்கி ரூ.150 கோடி வரை காசியாபாத் நகர் நிகாம் நிதி திரட்டியுள்ளது.
- நாட்டில் நகராட்சிக் கழகத்தால் வழங்கப்பட்ட முதல் பசுமைப் பத்திரம் இதுவாகும்.
- இந்தத் தொகையானது காசியாபாத்திலுள்ள இந்திரபுரத்தில் மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப் பயன்படுத்தப்படும்.
- ரூ.240 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு நிதியளிக்க இத்தொகை பயன்படுத்தப் படும்.
- இந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள், சுத்திகரிக்கப்பட்ட நீரைத் தொழிற்சாலைகளில் மீண்டும் உபயோகிக்க வழிவகை செய்யும்.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில், நிதி திரட்டிய இரண்டாவது நகராட்சிக் கழகம் காசியாபாத் நகர் நிகாமாகும்.
- இதற்கு முன்பு லக்னோ நகராட்சி கழகமானது BSE பங்குச் சந்தையில் தன்னைப் பதிவு செய்துள்ளது.

டிஜிட்டல் பணவழங்கீட்டு முறையில் இந்தியா முன்னணி

- ஐக்கிய ராஜ்ஜியத்தில் (UK) அமைந்துள்ள பணவழங்கீட்டு அமைப்பு நிறுவனமான ACI என்ற நிறுவனமானது டிஜிட்டல் பணவழங்கீட்டு முறை பற்றிய ஒரு அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது.
- இவ்வறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டில், இந்தியா அதிக எண்ணிக்கையிலான நிகழ்நேர இணையவழிப் பணப் பரிவர்த்தனைகளை மேற்கொண்டுள்ளது.
- Paytm. Phonope, Bharatpe, Pine Labs போன்ற தளங்களின் மூலம் இந்தியாவில் டிஜிட்டல் பணவழங்கீடு மேற்கொள்ளப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒருங்கிணைக்கப்பட்ட பணவழங்கீட்டு இடைமுகத்தின் (UPI – United Payment Interface) மூலம் மேற்கொள்ளப் படும் பரிவர்த்தனைகள் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 18.7% உயர்ந்துள்ளன.
- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் UPI பரிவர்த்தனைகள் ரூ.4.25 லட்சம் கோடிகள் ஆகும்.
- இது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரூ.5.05 லட்சம் கோடிகளாகும்.
- இணையதளப் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையில் சீனா, அமெரிக்கா, தென்கொரியா, ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளை விட இந்தியா முன்னணியில் உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2024 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் மின்னணு பணப் பரிவர்த்தனைகளின் பங்கு 50% என்ற அளவினை மிஞ்சும்.

சிறுசேமிப்புத் திட்டங்கள்

- நிதி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய சேமிப்பு நிறுவனமானது, நாட்டின் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கு அதிக அளவில் பங்களித்த மாநிலம் என்று மேற்கு வங்க மாநிலத்தை அறிவித்துள்ளது.

- மொத்தத் தொகுப்பு நிதிக்கு இம்மாநிலம் 15% பங்கினை வழங்கியுள்ளது.
- இம்மாநிலம் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை, ரூ.90,000 கோடி வரை வசூலித்து உள்ளது.
- இதனையடுத்து உத்தரப் பிரதேசம் இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளது.
- உத்தரப் பிரதேசம் ரூ.69.660 கோடி ரூபாயினை வசூலித்துள்ளது.
- மகாராஷ்டிரா மூன்றாமிடத்தில் உள்ளது
- மகாராஷ்டிரா மாநிலம் ரூ.63.026 கோடி என்ற கணக்கில் 10.57% பங்களித்துள்ளது.
- குஜராத் நான்காமிடத்தில் உள்ளது.
- குஜராத் மாநிலம் ரூ.48,645 கோடி என்ற கணக்கில் 8.16% பங்கினை அளித்துள்ளது.
- ரூ.28,598 கோடி என்ற கணக்கில் 4.8% உடன் தமிழ்நாடு ஐந்தாமிடத்திலுள்ளது.

ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளின் பொருளாதார மற்றும் சமூக கணக்கெடுப்பு 2021 அறிக்கை

- "கோவிட் 19 தொற்றுக்குப் பிந்தைய காலகட்டத்தில் மீண்டு வந்த பொருளாதாரங்களை நோக்கி" எனும் ஒரு தலைப்பிலான ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளின் பொருளாதார மற்றும் சமூக கணக்கெடுப்பு 2021 என்ற ஒரு அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கை ஐக்கிய நாடுகளின் ஆசியா மற்றும் பசிபிக் ஆகியவற்றிற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தால் (UNESCAP – பல Economic and Social Commission for Asia and Pacific) வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2021-22 நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7% அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- முந்தைய நிதி ஆண்டு பெருந்தொற்றின் தாக்கத்தின் காரணமாக வழக்கமான வர்த்தக நிலையில் 7.7% வீழ்ச்சியினைக் கண்டது.

UNESCAP

- UNESCAP என்பது ஆசியா-பசிபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் ஒரு பிராந்திய வளர்ச்சிப் பிரிவு நிறுவனம் ஆகும்.
- இந்த அமைப்பில் இந்தியா உட்பட ஆசியா-பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 53 உறுப்பினர் நாடுகளும் 9 துணை உறுப்பினர் நாடுகளும் உள்ளன.

போர்ப்ஸ் வருடாந்திர கோடீஸ்வரர்கள் குறியீடு

- போர்ப்ஸ் வருடாந்திர உலக கோடீஸ்வரர்கள் குறியீட்டில் தொடர்ந்து நான்காவது வருடமாக அமேசான் நிறுவனத்தின் நிறுவனர் செஃப் பெசோஸ் முதலிடத்தில் உள்ளார்.

RANK	NAME	NET WORTH		AGE	COUNTRY / TERRITORY
1.	Jeff Bezos	$177 B	▲	57	United States
2.	Elon Musk	$151 B	▲	49	United States
3.	Bernard Arnault & family	$150 B	▲	72	France
4.	Bill Gates	$124 B	▲	65	United States
5.	Mark Zuckerberg	$97 B	▲	36	United States
6.	Warren Buffett	$96 B	▲	90	United States
7.	Larry Ellison	$93 B	▲	76	United States
8.	Larry Page	$91.5 B	▲	48	United States
9.	Sergey Brin	$89 B	▲	47	United States
10.	Mukesh Ambani	$84.5 B	▲	63	India

- 84.5 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற நிகர சொத்து மதிப்புடன் இந்தியாவின் கோடீஸ்வரரான முகேஷ் அம்பானி 10வது இடத்தில் உள்ளார்.
- 2,755 கோடீஸ்வரர்களை உள்ளடக்கிய இந்த 35வது போர்ப்ஸ் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 06 ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது.
- இப்பட்டியலானது 2021 ஆம் ஆண்டின் மார்ச் 05 முதலான பங்குச் சந்தை விலைகள் மற்றும் சந்தை நிலவரங்களைப் பயன்படுத்திச் சொத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு உள்ளது.

உலக பொருளாதாரக் கண்ணோட்டம்

- சர்வதேச நாணய நிதியமானது தனது புதிய கண்ணோட்ட அறிக்கையில் இந்தியாவின் 2022 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி வீதமானது 12.5% ஆக இருக்கும் எனக் கூறியுள்ளது.
- இதன்மூலம் இந்தியா GDP வளர்ச்சியில் முதலிடத்தில் உள்ளது.
- மேம்பட்ட பொருளாதாரம் கொண்ட நாடுகளில் கூட 12.5% வளர்ச்சி என்பது மிக உயர்ந்ததாகும்.

RXIL

- RXIL என்பது இந்திய வரவுகள் பரிமாற்றச் சந்தை ஆகும். (Receivables Exchange of India)
- சமீபத்தில் மாதாந்திர அளவான ரூ.1000 கோடியை கடந்த முதல் TREDS தளமாக RXIL தளம் உருவெடுத்து உள்ளது.
- இத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிமாற்றங்கள் (அளவில்) ஏப்ரல் 2020 ஆம் ஆண்டில் ரூ.69 கோடியிலிருந்து மார்ச் 2021 ஆம் ஆண்டில் ரூ.1,105 கோடி வரை அதிகரித்து உள்ளன.
- இது நாட்டின் பொருளாதார மீட்சியைக் குறிக்கிறது.
- மேலும் கோவிட்-19 பெருந்தொற்றினால் மோசமாக பாதிக்கப்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி மீட்சியடைவதையும் இது குறிக்கிறது.

குறிப்பு

- RXIL 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) மற்றும் இந்திய தேசியப் பங்கு சந்தை லிமிடெட்டின் ஒரு கூட்டுக் குழுமமாகும்.
- இது TReDS' என்ற தளத்தினை இயக்குகிறது.

TREDS

- TREDS என்பது பல நிதி நிறுவனங்களிடமிருந்து சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (MSME) நிதியளிக்க உதவும் ஒரு மின்னணு தொழில்நுட்பத் தளமாகும்.
- TREDS தளத்தில் உள்ள மூன்று முக்கிய பங்கேற்பு அமைப்புகள்,
  - சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (விற்பனையாளர்கள்)
  - நிதி வழங்குவோர் மற்றும்
  - கூட்டுறவு நிறுவனங்கள் (வாங்குபவர்) ஆகியனவாகும்.
- RBI வங்கியின் கூற்றுப்படி, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மட்டுமே TREDS-தளத்தில் விற்பனையாளர்களாக பங்கேற்க இயலும்.

மது கிராந்தி தளம் மற்றும் தேன் விற்பனை முனையங்கள்

- மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திரசிங் தோமர் அவர்கள் இந்தியாவில் தேன் உற்பத்தித் திட்டத்தை மேம்படுத்த மது கிராந்தி தளம் மற்றும் இந்தியாவின் தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தையிடல் கூட்டமைப்பின் (NAFED) தேன் விற்பனை முனையங்களைத் தொடங்கி வைத்தார்.
- மது கிராந்தித் தளமானது தேசிய தேனீக்கள் வாரியத்தின் முன்னெடுப்பாகும்.
- இது தேசிய தேனி வளர்ப்பு மற்றும் தேன் உற்பத்தித் திட்டத்தின் கீழ் இயக்கப் படுகிறது.

மதுகிரந்தி தளம்

- இத்தளமானது டிஜிட்டல் தளத்தில் தேனின் மூலப்பொருள் மற்றும் தேன் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றினைக் கண்டறிய உதவும்.
- மேலும் தேனின் தரம் மற்றும் தேனில் கலப்படம் செய்ய பயன்படுத்தப்படும் மூலத்தைக் கண்டறியவும் இத்தளம் உதவும்.
- தேன் உற்பத்தி, சந்தைப்படுத்துதல், தேனீ வளர்ப்பு மற்றும் விற்பனையில் ஈடுபடும் அனைத்துப் பங்குதாரர்களின் தகவல்களும் இத்தளத்தில் சேமிக்கப்படும்.

தேன் விற்பனை முனையங்கள்

- இவை தேன் விற்பனை செய்வதற்கான சிறப்பு முனையங்களாகும்.
- இது NAFED அமைப்பால் இயக்கப் படுகிறது.

NAFED

- NAFED என்பது இந்தியாவின் தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தையிடல் கூட்டமைப்பு (National Agricultural Cooperative marketing Federation) ஆகும்.
- NAFED 14 முதல் 15 வரையிலான தேன் விற்பனை முனையங்களை உருவாக்கி உள்ளது.
